05.11.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 143 /2019 ) திரு.சங்கரநாராயணன்.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) அச்சம்மாள் கணவர் பெயர் முருகன் என்றால் சரிதான். அச்சம்மாள் அவரின் தாயார் லெட்சுமியம்மாளுக்கு ஒரே மகள் என்றால் சரிதான். அச்சம்மாளின் தாயார் லெட்சுமியம்மாளும் எனது தகப்பனார் சுப்பா நாயக்கரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். லெட்சுமியம்மாளுக்கும், அவரின் உடன் பிறந்தவர்கள் சுப்பம்மாள்,வீரம்மாளும், அச்சம்மாள் ஆகியோர்களுக்கு சங்கரப்பன் நாயக்கர் எந்த சொத்தை பாகமாக கொடுத்தார் என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சுப்பா நாயக்கருக்கு பாகப்பிரிவினையில் எந்த சொத்து பாகத்தில் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் முதல்விசாரணையை நான் படித்துப்பார்க்கவில்லை. கோதை நாச்சியார் சங்கரப்ப நாயக்கர் மகன் வீரப்ப நாயக்கரின் மனைவி என்றால் இல்லை.கோதை நாச்சியார் சகோதரர் அமரர்.ஜெகதீசன் என்றால் சரிதான். அமரர்.ஜெகதீசன் மனைவி அச்சம்மாள், மகள் அச்சம்மாள், விஜயசாந்தி,உமாமகேஸ்வரி, சத்தியபிரியா ஆகியோர்கள் என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். அமரர்.ஜெகதீசன் மனைவி கோதைநாச்சியார் என்றால் தவறு கோதை நாச்சியார் தங்கை ஆவார். அமரர்.ஜெகதீசன், கோதைநாச்சியாரின் தகப்பனார் வீரப்ப நாயக்கருக்கு எந்த சொத்து பாகம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை முதலவிசாரணையில் சொல்லவில்லை என்றால் முதல் விசாரணையை நான் படித்துப்பார்க்கவில்லை. சர்வே எண்.302/1 நாராயணசாமிக்கும், அய்யலுசாமிக்கும் மட்டும் பாகத்தில் கொடுக்கப்பட்டது என்பதற்கு இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல அவர்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு நன்கு தெரியும். சர்வே எண்.302/1 பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 10 நபர்கள் பெயரில் உள்ளது. பெயர்கள் சொல்ல முடியுமா என்றால் ஓரளவுக்கு சொல்ல முடியும். பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

2) தாவாச்சொத்தை பொறுத்த எந்த வருடம் பாகப்பிரிவினை நடைபெற்றது என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியும். 1959 முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில்

தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். தாவாச்சொத்தில ¼ பங்கு 1ம்பிரதிவாதியான அச்சம்மாளுக்கு பாத்தியப்பட்டதால தான் பட்டாவில் பெயரில் உள்ளது என்று சொன்னால் பங்கு கிடையாது. வாய்மொழியாக நாங்கள் பாகம் பெற்று அனுபவித்து வருகிறோம். பட்டாவில் அச்சம்மாள் பெயர் உள்ளது என்றால் சரிதான். அச்சம்மாள் பெயர் பட்டாவில் இருப்பது குறித்து வட்டாட்சியரிடம்இ துவரை ஆட்சேபனை செய்து நானோ, வாதிகளோ நடவடிக்கை எடுத்தோமா என்றால் இதுவரை எடுக்கவில்லை பிரச்சனையும் இல்லை. தாவாச்சொத்தில் 33 செண்டு 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை 2ம்பிரதிவாதி உரிய தொகை கொடுத்து 1ம்பிரதிவாதி பெற்றுள்ள கிரையம் செல்லத்தக்கதாகும் என்றால் சரியல்ல. 3வது தபசில் சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் திருவேங்கடம் அருகில் சங்குபட்டியில் குடியிருந்து வருகிறேன். எத்தனை வருடங்களாக அங்கு இருந்து வருகிறேன் என்றால் 20 வருடங்களாக இருந்து வருகிறேன். தாவாச்சொத்து உள்ள ஊரில் வீடு, நிலம் உள்ளது அதனால் 10 நாட்களுக்கு ஒரு முறை வந்து செல்வேன்.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
05.11.2025.